# இறைவா எனக்கு நீதான் வேண்டும்

இறைவா எனக்கு நீதான் வேண்டும்
இணையில்லா உன் உறவே வேண்டும் -2

**1)**
மேய்ப்பன் நீயன்றோ எனைக் காக்க வேண்டும்
மேவும் கருணை எனைத் தேற்ற வேண்டும் -2
மூச்சிலும் பேச்சிலும் நீ வாழ வேண்டும்   -2
முழுமையே முதல்வனே எனையாள வேண்டும்

(இறைவா எனக்கு நீதான் வேண்டும்)

**2)**
தந்தையும் தாயுமாய் நீ தாங்க வேண்டும்
தரணியில் உன் நெறி
நான் போற்ற வேண்டும்-2
உயிரினில் கலந்தே உறைந்திட வேண்டும்  -2
உதயமே உவகையே உன்னருள் வேண்டும்

(இறைவா எனக்கு நீதான் வேண்டும்)